புதுமலர்: 09 பங்குனி - சித்திரை இதழ்: 02

# அனல்

இணை ஆசிரியர்கள்
☞ யோ.நிக்ஷன்
☞ வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.03.2012

# பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் : செயல்களின் வலிமை
* வாலிபர் வளாகம் : தெரிவை தேவனிடமே விட்டுவிடு!
* சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்!
* பக்தர்களின் பயிலகம்
* வினா விடை : 50
* நற்செய்தி : உன்னோடு இருக்க வேண்டியவர் யார்?
* தேவ ஆலோசனை
* குறுக்கெழுத்துப் போட்டி : 48
* அருட்பணியாளர் சரிதை : ரீஸ் ஹவல்ஸ்
* மூவரி முத்துக்கள்
* அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**


The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்,
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



## அன்பின் அனல் வாசகர்களுக்கு!


**இதோ, மரித்தேன் ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கின்றேன் என்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகின்றேன்.**

இவ் வருடத்தில் மறுபடியும் இச் சஞ்சிகையூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வேதாகமம் சொல்கின்றது: **"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்களென"** எனவே உங்கள் பாரங்களை சுமக்கும் இயேசு இன்றும் உங்களை ஆசீர்வதிக்க, காப்பாற்ற, சுகம் கொடுத்து பெலப்படுத்த ஆயத்தமாக இருக்கின்றார். **நிச்சயமுள்ளவர்களாய் கிறிஸ்து இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தில் வளருங்கள்.**

ஒவ்வொரு மனிதனையும் பூரண மனிதனாக மாற்றும் அவரது சத்திய வேத வசனங்களின்படி வாழ்வதற்கு உங்களை ஒப்புக் கொடுங்கள். **அவராலே நித்திய வாழ்வை பெற்றுக்கொள்ள உங்கள் பாவங்களை அறிக்கை செய்யுங்கள்.** பாவத்தின் கவர்ச்சிகள் பெருகி மனிதனை வீழ்த்திக் கொண்டிருக்கும் இக் காலத்தில் **இயேசுவுக்காக பரிசுத்த வாழ்வு வாழ உன்னை ஒப்புக்கொடு!**

உன் பரிசுத்தம் கிறிஸ்துவுக்காக மற்றவர்களை கவர்ந்திழுக்கட்டும். கிறிஸ்து பக்கமாய் பாவிகள் கவர்ந்திழுக்கப்பட்டு வாழ்வடைந்தார்கள். **அந்த கிறிஸ்து இயேசுவுக்கு சாட்சியாக பாவத்திலே மாழும் மக்களை அவர் பக்கமாய் திருப்ப நீ உன்னை பரிசுத்தப்படுத்தி ஒரு தூய்மையான வாழ்வு வாழ். அப்போது ஆண்டவரின் நாமம் உன் வாழ்வு மூலம் மகிமைப்படும்.**



— ஆசிரியர் —




# செயல்களின் வலிமை



ஒரு நாள் ஒரு வாலிபன் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். எதிரிலே தன் வயதிற்கொத்த இன்னொரு வாலிபனை கண்டான். அவனது கைகளில் அநேக புத்தகங்கள், அவற்றை மிகவும் சிரமத்துடன் எடுத்து வந்து கொண்டிருந்தான். **அவனிடம் ஏதோ ஓர் மாற்றம் தெரிந்தது. வழமையாக வாலிபரிடம் இருக்கும் மகிழ்ச்சி, சுறுசுறுப்பு, குறும்புத்தனம் எதுவும் அவனிடம் தென்படவில்லை. அவனது முகத்தில் ஏதோ ஓர் சோகம் தெரிந்தது.** திடீரென சில சிறுவர்கள் வேகமாக ஓடிவந்தனர். ***சற்றும் எதிர்பாராத விதமாக அவனோடு மோதினர். அவனுடைய கைகளில் இருந்த புத்தகங்கள் எல்லாம் கைநழுவி கீழே விழுந்தன. அந்த பையனும் நிலைகுலைந்து போய் நிலத்திலே விழுந்தான்.*** அந்த சிறுவர்கள் சிரித்துக் கொண்டே அப்படியே ஓடிச்சென்றார்கள். கீழே விழுந்தவன்



எழுந்திருந்து தனது புத்தகங்களில் படிந்த அழுக்கை தட்டி அவற்றை எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தான்.

இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த அந்த மற்ற வாலிபன் அவனுக்கு உதவும் எண்ணத்தோடு அவனிடமாக சென்றான். **அவனது முகத்தில் துக்கத்தின் ரேகைகள் பளிச்சென தெரிந்தன.** இந்த வாலிபன் அவனைத் தூக்கி விட்டு அவனது புத்தகங்களையும் எடுத்துக் கொடுத்தான். இருவரும் ஒன்றாக நடக்கத் தொடங்கினார்கள். இந்த வாலிபன் அவனைக் குறித்து விசாரிக்கத் தொடங்கினான்:

*"உனது பெயர் என்ன? ஜோன்"*

*"நீ இந்த பாடசாலையிலா கல்வி கற்கின்றாய்? ஆம்"*

*"அப்படியா? நான் சமீபத்தில் தான் இங்கு வந்தேன். ம்ம்ம்......"*


*ஒரு சிறு மௌனம்... "மிகவும் நன்றி" என்றான் ஜோன்*

*"எதற்கு? எனக்கு உதவி செய்ததற்கு"*

*"நாம் இனி நண்பர்களாக இருப்போம். இன்று மாலை என்னுடனும் என் நண்பர்களுடனும் கிரிக்கெட் விளையாட வருகின்றாயா?" "............ஆம்"*

அவன் முகத்தில் முதல் தடவையாக சிறு புன்னகை தெரிந்தது.

இந்த சிறு உரையாடல் காலப்போக்கில் **இருவரையும் உற்ற நண்பர்களாக்கியது. இவர்களுடைய நட்பு பல்கலைக்கழகம் வரை சென்றது.** பல நாட்களை இவர்கள் ஒன்றாகவே கழித்தனர். இன்பம், துக்கம், சோதனைகள் என இந்த இரு நண்பர்கள் பகிர்ந்து கொண்ட காரியங்கள் ஏராளம். நாட்கள் கடந்தன, **இவர்களது கல்வி முடிந்து பட்டம் பெறும் நாளும் வந்தது. அவர்களது உள்ளம் பூரித்தது.**



**அன்று மாலை பட்டம் பெற்றவர்களுக்கான விருந்துபசாரம் நடைபெற்றது. அந்த நிகழ்விலே மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது வெற்றியை பகிர்ந்து கொள்வதற்கும் தமக்கு உதவியர்களுக்கு நன்றி கூறவும் நேரம் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவராக தமது நன்றியை தெரிவித்தனர். ஜோனின் முறை வந்தது.**

*"எல்லோருடைய வாழ்விலும் அவர்களுடைய வெற்றியின் பின் உறுதுணையாக பலர் இருந்துள்ளனர். அவ்வாறு எனது வெற்றியின் முழு காரணமும் எமது நண்பன் தான்." ஜோன் தனது நண்பனை அருகில் அழைத்தான். அவனைக் கட்டியணைத்தவாறு தொடர்ந்தான். "அன்றொரு நாள் மாலை நான் தற்கொலை செய்யும் எண்ணத்துடன் வீடு நோக்கி சென்றுகொண்டிருந்தேன். அன்று தான் என் நண்பனை முதன் முதல் சந்தித்தேன்". ஜோன் அன்று தனக்கு நடந்த காரியத்தை மீண்டும் நினைவுபடுத்தினான். "யாருமே என்னைக் குறித்து கவலைப்படவில்லை, ஆனால் இவன் எனக்கு அன்று உதவி செய்தான். அவனது உதவி, பேச்சு, அன்பு என்னை சிந்திக்க வைத்தது. எனக்காக அன்பு காட்ட ஒருவன் உள்ளான் நான் ஏன் என் வாழ்க்கையை மாய்க்க வேண்டும்? ஒரு முறை முயற்சி செய்து பார்க்கலாம், என்று நினைத்தேன். ஆம் வெற்றி பெற்றேன்" என்றான். அன்று தான் முதல் தடவையாக இந்தக் கதையை கேட்ட நண்பன்*

*அழவே ஆரம்பித்துவிட்டான். இரு நண்பர்கள் கட்டியணைத்து அழுதனர்...... சிரித்தனர்.*

ஆம் ஒரு சிறு செய்கை எவ்வளவு வல்லமை கொண்டது. **எம்மை அறியாது நாம் செய்யும் ஒரு சிறு உதவியோ, பேசும் வார்த்தைகளோ யாரோ ஒருவருடைய வாழ்க்கைப் பயணத்தையே மாற்றி அமைக்கலாம்.** எமது செயல்களுடைய, சொற்களுடைய வலிமையை நாம் ஒரு போதும் குறைத்து மதிப்பிடக்கூடாது. அது நிச்சயமாக மற்றவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். **எமது செயல்களும் சொற்களும் இன்னொருவருடைய வாழ்வையும் மனதையும் உடைக்கவும் முடியும், உருப்படுத்தவும் முடியும்.**

**தேவன் எம் ஒவ்வொருவரையும் இன்னொருவருடைய வாழ்க்கையிலே ஓர் தாக்கத்தை ஏற்படுத்தும் வண்ணம் தீர்மானித்து உள்ளார். நாம் ஏற்படுத்திய தாக்கம், ஏற்படுத்தப்போகின்ற தாக்கம் எப்படியுள்ளது? நன்மைக்கா? தீமைக்கா? அதை நாமே தான் தீர்மானிக்க வேண்டும்.**

"தேவ கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக"



கெ. இன்பரூபன்

## வினா விடை - 49
## சரியான விடை எழுதியாவர்கள்

01. திருமதி. விநோதினி சுபாஸ்கரன் - கைதடி
02. சூரியேஸ் ஜான்சி - நாவற்குழி
03. து.கிருஷ்ணகுமார் - ஊர்காவற்றுறை
04. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
05. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
06. ஆர்.செந்தாழினி - ஊர்காவற்றுறை
07. வி.ஸர்மிளா - ஊர்காவற்றுறை
08. து.கிரிசார் - ஊர்காவற்றுறை
09. பா.தர்சினி - காரைநகர்
10. அ.வெரோனிக்கா - காரைநகர்
11. நா.கிருஸ்ரீனா - காரைநகர்
12. அ.எஸ்தர் - காரைநகர்
13. அ.மெரிடொறின் - காரைநகர்
14. சி.கல்யாணி - காரைநகர்



# வாலிபர் வளாகம்

## தெரிவை தேவனிடமே விட்டுவிடு!



வெளியே சொல்ல முடியாத சில இரகசிய ஆசைகள் நமக்குள் இருக்கலாம். அது திருமணமாகவோ, நாம் செய்ய விரும்பும் ஓர் தொழிலாகவோ அல்லது ஊழியமாகவோ இருக்கலாம். ஒரு விசேஷித்த துறையில் வளர்ந்து பெரியவனாக வரவேண்டும் என்பதாக இருக்கலாம். **ஆனால் நாம் நமது ஆசைகளைத் தேவனுடைய கரத்தில் ஒப்படைத்துவிட்டு தேவனே நீர் தான் எனக்காக தெரிந்து எடுக்க வேண்டும்: நான் எனக்காக தெரிந்து கொள்ளமாட்டேன் என்று ஜெபிப்பதே நாம் செய்ய வேண்டிய முக்கியமான காரியமாகும்.**

**சிறந்த வாலிப ஜீவியத்தையும் தேவ நோக்கத்தில் சரியாக நடக்கவும், வாழவும் விரும்பும் ஒரு வாலிபன் இதற்கு தன்னையும் தன் சுயத்தையும் முழுமையுமாய் அற்பணித்து விட்டிருப்பான்.**

இந்த இளம் வயதில் நமது எண்ணங்களும் இலட்சியங்களும் அடிக்கடி மாறிக்கொண்டேயிருந்தாலும் ஆண்டவராகிய இயேசு நம்மை எதற்கென்று முன்குறித்தாரோ அதை **நாம் ஆவியானவரின் துணையோடு அறிந்து கொண்டு அதற்கு ஏற்ப நம்மை நடத்தும்படி தேவகரத்தில் ஒப்புக் கொடுக்கும் போது மாற்றங்களுக்கும் தடுமாற்றங்களுக்கும் ஓர் முற்றுப் புள்ளி வைத்து சீரான பாதையில் திசை மாறாமல் செல்ல முடியும்.**

நம்முடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற விஷயத்தில் இரண்டில் ஒன்றை தெரிந்து கொள்ள முடியும்.

**ஒன்று நாமாகவே தெரிந்து கொள்வது: மற்றொன்று தெரிந்து கொள்ளுகின்ற காரியத்தை நம்மைப்படைத்த ஆண்டவரின் விருப்பத்திற்கே விட்டு விடுவது......**

## உன்னுடைய தெரிவு எப்படி?......



*ஒரு சிறுவன் தன்னுடைய தாயாரோடு கடைக்குப் போயிருந்தான். அவனது சுட்டித்தனமான பேச்சைக் கண்டு சிலாகித்துப்போன கடைக்காரர் ஒரு சாக்கலெட் போத்தலை அவனிடம் நீட்டி உன் கை நிறைய எடுத்துக் கொள் என்றாராம். ஆனால் அவனோ இல்லை அங்கிள் என்று மறுப்புக்கூறினான். கடைக்காரர் இல்லை நீ கண்டிப்பாக எடுத்துக் கொள்ளத்தான் வேண்டுமென வற்புறுத்த, சரி நீங்களே தாருங்கள் என்று அவன் கூற மகிழ்ச்சியோடு அந்த கடைக்காரர் கை நிறைய சாக்கலெட்டை எடுத்து அந்த சிறுவனின் கையில் போட்டாராம். வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது நீ ஏன் சாக்கலெட் வேண்டாம் என்று சொன்னாய்? உனக்குத் தானே சாக்கலெட் என்றால் அதிகம் பிடிக்குமே என்று தாயார் கேட்க அச் சிறுவன் நான் சின்னபையன் என் சின்ன கையால் எடுத்தால் 2, 3 சாக்லெட் தான் எடுக்க முடியும். ஆனால் அந்த அங்கிள் கை பெரிய கை, அவர் கையால் கொடுத்ததினால் இப்போ 10 சாக்லெட் கிடைச்சிருக்கு என்றானாம்.* இது எப்படியிருக்கு! பார்த்தீர்களா? இது ஒரு கதையானாலும், இதில் உண்மையுண்டு.

எதை வேண்டும் என்றாலும் தெரிந்து கொள்வதற்கு ஆண்டவர் நமக்கு உரிமை கொடுத்திருந்தாலும் அந்த பையன் தெரிந்து கொள்ளும் உரிமையை கடைக்காரனிடமே விட்டுவிட்டது போல *ஆண்டவரே என்னைக் குறித்து நன்றாய் அறிந்திருப்பவரும் எனக்கு எது ஏற்றது என்பதனை புரிந்து கொள்பவரும்* ***"என் எதிர்காலத்தை கரத்தில் வைத்திருப்பவரும் நீரே"*** *ஆகவே என் விருப்பம் வேண்டாம் உம் விருப்பம் போல நடத்தும் என்று* அவருடைய கரத்தில் எம்மை முற்றிலும் ஒப்படைப்போம். ஒரு வேளை ஆரம்பத்தில் இது *கடினமாய் தோன்றினாலும்* **முடிவிலே மிகுந்த நன்மைக்கு ஏதுவாகவும் ஆசீர்வாதமாகவும் அமையும்.**

லோத்து தன் உள்ளத்தில் இருந்த ஆசையினாலும் தனக்கென்று ஒரு இடத்தை தெரிந்து கொண்டான் என்று

**ஆதியாகமம் 13:10-11ல்** வசனங்கள் சொல்லுகின்றன. *"அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்து பார்த்து, யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதையும் நீர்வளம் பொருந்தினதாய் இருக்க கண்டான்".* நீர் வளம் பொருந்திய செழிப்பான யோர்தான் சமவெளி லோத்துவிற்கு மிக அருமையாய் தோன்றியது. ஆனால் அங்குள்ள ஜனங்களோ மிகவும் அருவருப்பானவர்களாய் இருந்தார்கள். **சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள். ஆதியாகமம் 13:13** லோத்து தன் பார்வைக்கு நலமானதை தெரிந்து கொண்டு தன் வாழ்க்கையை தானே நடத்த விரும்பினான். **ஆனால் அவன் கண்டவைகளால் ஏமாற்றப்பட்டு மன வேதனைக்கும் நியாயத்தீர்ப்புக்கும் உள்ளானான்.** ஆனால் ஆபிரகாமோ தேவன் தனக்காக தெரிந்து கொள்ளட்டும் என்று காத்திருந்தான். **வெளித்தோற்றத்தால் ஏமாறாமல் உண்மையை உணர்ந்தான்.** லோத்து தான் தெரிந்து கொண்ட எல்லாவற்றையும் அதாவது **தன் குடும்பம், செல்வம், மரியாதை எல்லாவற்றையும் இழந்தான்.**

**தெரிந்து எடுத்தலை தேவனிடமே விட்டுவிடுவது சாலச்சிறந்தது. நமது பரமபிதா தமது அளவற்ற ஞானத்தால் தெரிந்தெடுப்பதே தலை சிறந்தது.**

பதட்டம் இல்லாமல் வாலிபத்தை கடக்கவும்
ஈற்றிலே ஜீவ கிரீடத்தை பெறவும்
உன் தெரிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து
தேவ சித்தத்துக்கும் அவரின் தெரிவுகளுக்கும் மனப்பூர்வமாய் சம்மதி.

**போதகர் வேதநாயகம் சுமணன்.**

---

## குறுக்கெழுத்துப் போட்டி - 47
## சரியான பதில் எழுதியவர்கள்

*01.* உ.டிறோன் - ஊர்காவற்றுறை
*02.* ரி.கிருஸ்ணகுமார் - ஊர்காவற்றுறை
*03.* ரி.கிருசாந் - ஊர்காவற்றுறை
*04.* க.றெஜீவன் - ஊர்காவற்றுறை
*05.* வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
*06.* மா.ஜெயந்தி - மானிப்பாய்
*07.* வி.சர்மிளா - ஊர்காவற்றுறை

# சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்!

**ஆண்டவர் இயேசுவின் பிறப்பு மாபெரும் சந்தோஷமானதும், உலகம் அனைத்திற்கும் ஆறுதலை உண்டாக்கின ஒன்றாகும்.** *மிகவும் கொடூரமான ஒரு மரணத்தை என் ஆண்டவர் ஏற்றார். காரணம:* ***'இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை"*** *அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தாலே சமாதானத்தை உண்டாக்கி தம்மோடு ஒப்புரவாக்கி கொள்ள தேவனுக்கு பிரியமாயிற்று.*

**இரட்சகர் இயேசு மரித்து உயிர்த்து எழுந்த பிற்பாடுகூட ஆதி அப்போஸ்தலர்களின் அனேக பிரசங்கங்களில் முன்வைக்கப்பட்ட கருத்துத்தான் இயேசுவின் சிலுவை மரணம்.** *காரணம்* **அவர் உனக்காக, எனக்காக, சர்வலோகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29) என்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தார்.** *அவர் வந்த நோக்கமும் அதுவாகவே இருந்தது. சிலுவையில் தொங்கும் போதுகூட அவர் மன்னிப்பின் செயலையே காட்டி நின்றார்.*



**இன்று உன் வாழ்க்கையும் ஒரு வேளை பாவத்தினாலே, வியாதியினாலே, தீராத மன வேதனையாலே மாற்ற முடியாத கொடிய கட்டுக்களில் அகப்பட்டு தலித்துக் கொண்டிருக்கலாம்.** *நான் நிர்ப்பந்தமான மனுஷன் யார் என்னை விடுதலையாக்குவார்? என்று ஏங்குகின்றாயா?* **கவலைப் படாதே! நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு, அவர் (இயேசு) தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்: அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1பேதுரு 2:24).**

ரேமா



# பக்தர்களின் பயிலகம்

## 1 தீமோத்தேயு

### 02ம் அதிகாரம்

***சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது (1கொரிந்தியர் 14:40) இதுவே சபை ஊழிய நடைமுறைக்கு அடிப்படை.*** இந்தப்பிரமாணத்தை நடை முறைப்படுத்துவதில்இளம்தீமோத்தேயுபிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியதாய் இருந்தது. ***பகிரங்க ஆராதனை அதன் ஒழுங்கையும் சாரத்தையும் சபை அங்கத்தவர்களாகிய புருஷரும் ஸ்திரிகளும் தேவ வசனத்திற்கு கீழ்ப்படியாததன் மூலம் இழந்து கொண்டிருந்தது.***

***திருச்சபையானது ஒரு அங்கஜீவி அல்லது அங்கங்களை ஒழுங்கு படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.*** நாம் ஆவியானவர் தம் சுயாதீனத்தைக் கொண்டிருக்க இடம் கொடுக்க வேண்டும். ***ஆனால் அங்கங்கள் ஒழுங்குபடுத்தப்படாமல் தாறுமாறானால் அது மரித்துப்போய்விடும்.***

***ஆவியானவரின் சுயாதீனம் எனும் போது, ஆவியானவரோடு நடக்காத கிறிஸ்தவர்களின் மாம்சிக எண்ணங்களாகும்.*** இப்படிப்பட்ட சுயாதீனம் முடிவில் அராஜகமாக மாறும். ***சபையும் தேவ வார்த்தையின் தரத்தில் இருந்து மெதுவாய் வழுவிப்போவது ஆவியானவரை துக்கப்படுத்துவதாகவும் மாறிவிடும்.*** இதைத் தடுக்க சபையில் புருஷர்கள் ஸ்திரிகளுடைய ஆவிக்குரிய உத்தரவாதம் என்பதனை காண்பிக்கவும் நினைவுபடுத்தவும் பவுல் புத்தி கூறுகின்றான்.

## 01. புருஷர்கள் ஜெபம் பண்ண வேண்டும் (1தீமோத்தேயு 2:1-8)

### அ) ஜெபத்தின் முதன்மை (1தீமோத்தேயு 2:1)

ஜெபத்தின் முக்கியத்துவம் சபையில் இழப்பதனைப் போல் துயரம் வேறு ஒன்றும் இல்லை. அப்போஸ்தலர்களின் ஊழிய காலத்தில் வசன ஊழியத்திற்கு கொடுக்கப்பட்ட பங்கு ஜெப ஊழியத்திற்கும் கொடுக்கப்பட்டது. ***எப்போது ஒரு உள்ளூர் சபை ஜெபத்தில் தங்கி இருப்பதனை நிறுத்துகின்றதோ அப்போ அந்த சபையின் ஊழியத்தையும் ஆசீர்வதிப்பதையும் தேவன் நிறுத்திவிடுவார்.***

ஆ) ஜெபத்தின் பல்வேறு வகைகள்

ஜெபத்தைக்குறிக்கும் 07 கிரேக்க பெயர்ச் சொற்கள் உண்டு. **இங்கு அவற்றில் 04 குறிப்பிடப்பட்டுள்ளது.**

**விண்ணப்பம் – உணர்ந்த தேவைக்காக ஓர் மனுவை சமர்ப்பிப்பது.**

**ஜெபம்:– இவ்வித செயற்பாட்டுக்கு பொதுவாக பயன்படுத்தப்படும் பாவனைச் சொல் ஜெபம்.** ஜெபமானது ஆராதிக்கும் ஓர் செயலாகும். **எமது அவசியங்களையும் தேவைகளையும் தெரியப்படுத்தும் ஒன்று மாத்திரமல்ல** நாம் ஜெபிக்கும் போது எம் இருதயங்களில் பயபக்தி காணப்பட வேண்டும்.

**வேண்டுதல் – இதன் அடிப்படை அர்த்தமானது ஒரு நபருடன் கிட்டி நெருங்கி நம்பிக்கையுடன் பேசுவது.**

**ஸ்தோத்திரங்கள்:–** இதுவும் ஆராதனையினதும் ஜெபத்தினதும் ஒரு பகுதியாகும். **ஜெபங்களுக்கு கிடைக்கும் பதிலுக்கு மாத்திரம் நாம் நன்றி செலுத்துவதில்லை.** தேவன் யார் என்பதற்காகவும் அவர் தன் கிருபையினால் நமக்கு என்ன செய்கின்றார் என்பதற்காகவும் நாம் நன்றி செலுத்துகின்றோம்.

ஒரு **சுயநலமுள்ள ஜெபத்தை முடிவு செய்ய செல்லும் ஒன்று அல்ல ஸ்தோத்திரம்**. இது பவுலின் முறையாகவும் இருந்தது. பெரிய ஜெப வீரன் தானியேலின் முறையாகவும் இருந்தது.

இ) ஜெபம் யாருக்கு?

எல்லா மனுஷருக்காகவும். **இது விசுவாசமுள்ள ஜெபத்தின் செல்வாக்குக்கு அப்பாற்பட்ட நிலையில் உலகில் ஒருவரும் இல்லை என்பதே பொருள்.** சபையானது அதிகாரமுள்ள ஒவ்வொருவருக்குமாக ஜெபிக்க வேண்டும் என பவுல் வலியுறுத்துகின்றான். **தேவன் அற்ற நீரோ மன்னன் அக் காலத்தில் சிங்காசனத்தில் இருந்தான்.** இருந்தும் விசுவாசிகள் அவனுக்காக ஜெபிக்கும்படி பணிக்கப்பட்டார்கள்.

**அந்தகாரத்தில் உள்ள ஒரு மனிதனையோ ஸ்திரியையோ எம்மால் மதிக்க முடியாவிட்டாலும் அவர்களது ஸ்தானத்தை மதித்து நாம் ஜெபிக்க வேண்டும்.** இது நமது சொந்த நன்மைக்கே ஆகும். **"நாம் எல்லா பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு"** ஆதி சபை எப்போதும் எதிர்ப்பையும் உபத்திரவத்தையும் சந்தித்தது. இதனால் அதிகாரமுள்ளவர்களுக்கு ஜெபிக்க வேண்டியதாயிற்று.

**அமைதல் – நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலையைக் குறிக்கிறது.** கலகமில்லாமல் - இது எம்முன் இருக்கும் சமாதான நிலையைக் குறிக்கின்றது. **இதன் பிரதிபலன் எம் வாழ்க்கையில் பக்தியும் நல்லொழுக்கமும் காணப்படும்.**

ஈ) ஜெபத்திற்கான காரணம் (1தீமோத்தேயு 2:3–4)

**உ) ஜெபத்தின் ஆதாரம் (1தீமோத்தேயு 2:5–7)**

எமது ஜெபமானது இயேசு இரட்சகராகவும் மத்தியஸ்தராகவும் செய்யும் வேலையிலேயே தங்கியுள்ளது. ***பரிசுத்தமுள்ள தேவனுக்கும் தவறும் மனிதனுக்கும் மத்தியில் நிற்கக்கூடிய பூரணமத்தியஸ்தர் இயேசுவே.*** யோபுவின் முறைப்பாடுகளில் ஒன்று மத்தியஸ்தன் இல்லை என்பதே. யோபு 9:33.

***ஆகவே தேவ சிங்காசனத்திற்கு தன் செய்தியை எடுத்துச் செல்ல ஒருவரும் இல்லை என்பது தான்.*** ஒரே ஒரு தேவன் மாத்திரம் இருப்பதால் ஒரே ஒரு மத்தியஸ்தன் போதும். ***அந்த மத்தியஸ்தர் இயேசுவே.*** இதற்கு வேறு யாரும் தகமையுடையவர்களாக மாற முடியாது. ***இயேசு தேவனும் மனிதனும் ஆகையால் தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியில் மத்தியஸ்தனாக இருக்கலாம்.*** இயேசு தன் வாழ்க்கையின் மூலமாகவும் மரணத்தின் மூலமாகவும் தேவனின் பரிசுத்த பிரமாணத்தின் கோரிக்கைகளைச் சந்தித்தார்.

***பாவியை மீட்கத் தேவையான விலைக்கிரயத்தைக் கொடுத்தார்.*** ஜெபத்தின் ஆதாரம் இயேசுவின் சிலுவைத் தியாக பலியானால் ஜெபமானது சபையின் முக்கிய ஈடுபாடுகளில் ஒன்றாக இருக்க வேண்டும். ***ஜெபிக்காமல் இருப்பது சிலுவையை அவமதிப்பதாகும்.*** எமக்காக மாத்திரம் ஜெபிப்பது சிலுவையின் உலகலாவிய அணைப்பை மறுதலிப்பதாகும்.

***தொலைந்த ஆத்துமாக்களை அலட்சியம் பண்ணுவது சிலுவையை அலட்சியம் பண்ணுவதாகும்.*** "எல்லா மனுஷரும்" என்பதே இப் பகுதிக்கான திறவுகோல். ***நாம் எல்லோருக்காகவும் ஜெபிக்க காரணம் கிறிஸ்து எல்லோருக்காகவும் மரித்ததினால் ஆகும்.***

**ஊ) ஜெபத்தில் காணப்பட வேண்டிய மனப்பாங்கு (1தீமோத்தேயு 2:8)**

பவுல் இங்கே புருஷர்கள் உள்ளூர் சபைகளிலே ஜெபம் பண்ண வேண்டும் என வலியுறுத்துகின்றான். ஆதிச் சபையில் புருஷர்களும் ஸ்திரிகளும் ஜெபம் பண்ணினார்கள். 1கொரிந்தியர் 11:4-5. ***ஆனால் இங்கு புருஷர்கள் முக்கியத்துவப்படுத்தப்பட்டு கூறப்படுகின்றார்கள்.***

அதிகமாக ஸ்திரிகளுக்கான ஜெபக்கூட்டம் காணப்படும். ஆனால் புருஷர்களுக்கானது குறைவு. ***புருஷர்கள் ஜெபிக்கா விட்டால் உள்ளூர் சபைகளில் ஊழியத்தை மேற்பார்வை பார்க்க அர்ப்பணமுள்ள தலைவர்கள் காணப்படமாட்டார்கள்.*** வழமையாக யூத புருஷர்கள் கரங்களை வானத்திற்கு நேராக உயர்த்தி ஜெபிப்பார்கள்.

***வேதத்தில் ஜெபிக்கும் நிலைகள் அனேகம் உண்டு.***

கரங்களை விரித்து நிற்பது — 1இராஜாக்கள் 8:22
முழங்காற்படியிடுதல் - தானியேல் 6:10

நிற்பது - லூக்கா 18:11
உட்காருவது - 2சாமுவேல் 7:18
தலையைக் குனிவது - ஆதியாகமம் 24:26
கண்களை ஏறெடுத்தல் - யோவான் 17:1
நிலத்தில் விழுவது - ஆதியாகமம் 17:3

***முக்கியமானது சரீரத்தின் நிலை அல்ல. இருதயத்தின் நிலையாகும்.***

பவுல் ஜெபத்திற்கு தேவையான 03 அவசியங்களைப் பற்றி கூறுகின்றான்.

01. ***பரிசுத்தமான கைகள் – இது பரிசுத்த வாழ்க்கையையும் சுத்த இருதயத்தையும் குறிக்கின்றது.*** குற்றமில்லாத வாழ்க்கை. பாவம் இருந்தால் ஜெபித்து பதிலை எதிர்பார்க்க முடியாது.

02. ***கோபம் – மற்றவர்களோடு நல்ல உறவில் இருக்க வேண்டும்.***

03. ***தர்க்கமுமில்லாமல்.***

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

தொடரும்...

## வினா விடை - 50

01. "தேவனுக்கு செலுத்தும் உற்சாகக் காணிக்கைகள் மேல் அதிகாரியாயிருந்தவன்" யார்?

02. "உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல" என்று வாசிப்பதெங்கே?

03. "தங்கள் பிள்ளைகளை அக்கினியில் தகனித்து வந்தார்கள்" எங்கே?

04. "தேசமெங்கும் எக்காளம் ஊதுவித்தவன்" யார்?

05. தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தை தெரிவிப்பான் என்று வாசிப்பதெங்கே?

06. ஸ்திரிகளும் பிள்ளைகளும் கூடக் களிகூர்ந்தார்கள் எங்கே?

9/2018 07. கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னவன் யார்?

08. உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் வழக்காடுவேன் என வாசிப்பதெங்கே?

2018 09. தேவன் சாட்சி கொடுத்த காணிக்கை யாருடையது? ஆபேலின் எபிரே 11:4

10. அவன் பிள்ளைகளின் கண்களும் பூத்துப்போகும் என்று வாசிப்பதெங்கே?

# உன்னோடு இருக்க வேண்டியவர் யார்?




உலக சரித்திரங்களில் ஆண்டாண்டு காலமாக அநேக கதாநாயகர்கள் உலகில் வலம் வருவது சர்வ சாதாரணமானது. **எப்படியெனில் விஞ்ஞானத்துறையில் ஒருவர் சிறந்தவராகலாம், மருத்துவத்துறையில், வேதாகமத்துறையில், விண்வெளித்துறையில், சமூகவியலில், சினிமாத்துறையில், அறிவியலில் ...... இப்படியாக ஒருவர் அல்லது பலராக சிறந்து விளங்கலாம்.** இப்படிப்பட்டவர்களை சில மக்கள் தமது கதாநாயகர்களாக ஏன்? தமது கடவுள்கள் என்றும் சொல்லி மனிதர்களை மனிதர்கள் வணங்கும் நடைமுறையை அறிமுகப்படுத்துகின்றார்கள்.

சமுதாயத்தில் பெரியவர்கள், உயர்ந்தவர்கள் நமக்கு உறவாக அல்லது பழக்கமாக இருந்தால் அது ஓர் பெருமையாக இருக்கும். **ஆனால் அந்தப் பெரியவர்களால் நாம் மறக்கப்படும் போது நாம் திகைக்கின்றோம், பதட்டப்படுகின்றோம், பயப்படுகின்றோம், பதறுகின்றோம்** இது தான் மனித நியதி.

ஆனால் வேதம் கூறுகின்றது: **உபாகமம் 33:27 அநாதி தேவனே உனக்கு அடைக்கலம் அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்** தங்களுக்குத் தாங்களே உதவி செய்ய முடியும் என்று தம் மாம்ச புய பெலத்தை நம்புகிறவர்களுக்கு தேவனுடைய உதவி வெளிப்படாது. **தங்களுக்குத் தாங்களே உதவி செய்ய முடியாது என்பதனை அறிந்தவர்கே அவர் உதவி செய்ய முடியும்.**

நம்மை மூழ்கடிப்பது போன்று தோன்றப்பண்ணும் பிரச்சினைகளில் நாம் சிக்குண்டு தவிக்கும் போது கடந்த காலத் தோல்விகள், நிகழ்காலத் தவறுகள் நம்மை மிரட்டிக் கொண்டே இருந்து நம்மை குறுகப்பண்ணும்.

**நாம் நமது பிரச்சினைகளைப் பார்க்கிலும் நம்மோடு இருப்பவர் யார்? நம்மை இந்த நிலைமைகளில் தேற்றக்கூடியவர் யார்? என்ற தெரிவை செய்ய வேண்டியவர்கள் நாமே.**

நம்முடைய மாம்ச நம்பிக்கைகளையும் கிரியைகளையும் விட்டுவிட்டு கர்த்தரையே நாம் சார்ந்து வாழும் படியாக அடி எடுத்து வைக்க வேண்டும்.

உலக சரித்திரத்தில் அநேக கதாநாயகர்கள் வலம்வரலாம்.

ஆனால் உலகைப்படைத்த ஒருவர் தான் தேவனாக வலம்வரலாம். அவருக்குப் பிறகு தானே எல்லாம். **எனவே இந்தப் பெரியவர் நம்மோடு இருக்க வேண்டிய தெய்விக கதாநாயகன் ஆவார். நம்மோடு இருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் தானே என்று எண்ணும் மனவலிமையை நீ பெற்றுத்தான் ஆகவேண்டும்.**

இதுவே நீர் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் பெரிதான உண்மை, சத்தியம், உண்மைச் சரித்திரம்.

எனவே உன்னோடு நீ வைத்திருந்த எல்லாரும் உன்னை கைவிடக்கூடியவர்கள் தான். **ஆனால் உனக்குள் வாழத்துடிக்கும் தெய்வம் இயேசு கிறிஸ்து உன்னைக் கைவிடமாட்டார்.**

நீர் உன்னோடு இருக்க வேண்டியவர் யார்? என்ற கேள்விக்கு நீர் விடை வைத்திருந்தால் நீர் இந்த உலகில் பெறுமதியானவர்.

**எனவே சற்று சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!! தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக.**



# தேவ ஆலோசனை

## வேதப்பகுதி: ஆதியாகமம் 19:15–22

லோத்து என்ற மனிதன் ஆபத்தான ஒரு சூழ்நிலையில் இருந்தான். அவனைக் காப்பாற்றுவதற்காக தேவன் அவனுக்கு ஒரு ஆலோசனை கொடுத்தார். ***உயிர் தப்புவதற்காக மலைக்கு ஓடிப்போ"*** என்றார். ஆனால் லோத்து அதற்கு கீழ்ப்படியாமல் மலைக்கு பதிலாக ஓர் ஊருக்குப் போனான்.



அதற்கு பிறகு தேவன் லோத்துவுடன் பேசவுமில்லை, எந்த நல்ல ஆலோசனையும் கொடுக்கவும் இல்லை. **ஏனென்றால் தேவன் தருகின்ற முதலாவது ஆலோசனைக்கு கீழ்ப்படியாதவர்களுக்கு தேவன் வேறு ஆலோசனைகள் கொடுப்பதில்லை.**

ஆம் நாம் வேதாகமத்தைப் படிக்கும் போது வேத வார்த்தைகள் வழியாக தேவன் நல்ல ஆலோசனைகளைத் தருகின்றார். **நம்முடைய நன்மைக்காக தருகின்ற ஆலோசனைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படியாவிட்டால் தேவன் அதற்கு பின்னர் பேசுவதுமில்லை, ஆலோசனை தருவதுமில்லை.** எனவே வேதாகமத்தை சாதாரணமாக படிக்கக்கூடாது. படித்துக் கீழ்ப்படிய வேண்டும்.

**சிந்தனைக்கு: வேதாகமத்தை சும்மா படிப்பதற்காக அல்ல, அதில் நீ படிக்கின்ற ஆலோசனைகளைக் கடைப்பிடி.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – மே 29

# குறுக்கெழுத்துப்போட்டி – 48


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 02 | 01 |
| | 03 | | | | | | | |
| | | 04 | | 05 | | | | |
| 06 | | | | | | | | |
| | | | 07 | | | | | |
| 08 | | | | 09 | | | | |
| | | | | | | | | 10 |
| 11 | | 12 | | | | | | |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி

## இடமிருந்து வலமாக

03. ஒரு சுரூபத்தை கட்டிலின் மேல் வைத்து அதின் தலைமாட்டிலே வெள்ளாட்டுத் தோலைப் போட்டு, துப்பட்டியினால் மூடி வைத்தவள்.
05. இவன் பெயருக்கு சீட்டு விழுந்தது.
06. நீங்கள்........... உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.
07. எலியா ஒளித்திருந்தார்.
09. மரித்தும் இன்னும் பேசுகிறவன்.
11. மிருகங்களோடு சஞ்சரித்து மாட்டைப்போல் புல் மேய்ந்த ராஜா.


## வலமிருந்து இடமாக



01. ரெவிதீம் என்னும் இடத்தில் இஸ்ரவேல் ஜனங்களைத் தாக்கியவர்கள்.
04. ஆதி என ஆரம்பித்து ஆமென் என முடிவடையும் நூல்.
07. சர்வாயுத வர்க்கத்தில் ஒன்று.
10. நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன் என்று சொன்னவன்.

## மேலிருந்து கீழாக

01. நோவாவின் பேழை இதன் மேல் தங்கியது.
02. யாக்கோபு ஏசாவினிடத்திற்கு செல்லும் போது கர்த்தருடைய தூதரை சந்தித்த பின்னர் அவ்விடத்திற்கு வைத்த பெயர்.



## கீழிருந்து மேலாக

08. பிறந்தது முதல் தலையின் மேல் சவரகன் கத்தி படாமல் இருந்தவன்.
12. இயேசுவின் முதல் அற்புதம்.

# அருட்பணியாளர் சரிதை

## ரீஸ் ஹவல்ஸ்

### இரட்சிப்பின் அனுபவம்

**வெ**கு சிறியவனாக இருக்கும் போதே ரீஸ்ஹவல்ஸ் தன்னைப் போலொத்த மற்ற சிறுவர்களைப் போல சாதாரண விருப்பங்கள், விளையாட்டுக்கள், பொழுது போக்குகள் ஆகியவற்றின் மீது மனநாட்டம் கொள்ளாத வித்தியாசமான ஓர் இளைஞனாக காணப் பட்டார். **தனிமையை நாடுதல், மெய் மறந்து இயற்கையின் வண்ணக் காட்சிகளையும், அழகையும் கண்டு ரசித்தல், ஆழ்ந்த சிந்தனை, தேவாராதனைகள், ஜெபக்கூட்டங்கள் ஆகியவற்றையே விரும்பி இவற்றாலேயே இன்பமும், ஓரளவு மனநிறைவும் காணும் குணாதிசயங்களை அவர் ஆண்டவரிடமிருந்து இயல்பாகவே பெற்றிருந்தார்.** ஆனால் இரட்சிப்பு என்பது என்ன என்பதனையும், இரட்சிப்பின் அனுபவத்தையும் இவர் இன்னும் அறியாதவராகவே இருந்தார். ஆண்டவரின் திருப்பணிக்கு அத்தியாவசியமான ஆன்மீகப்பக்குவத்தை இவர் இன்னும் பெற்றிருக்கவில்லை. அவருடைய பார்வையில் தான் மிகுந்த குறைவுள்ளவன் என்ற உணர்வு ஏற்படவில்லை. அந்த நாட்களில, **"நான் இயல்பாகவே ஒரு நல்லவனாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றேன்"** என்று அடிக்கடி அவர் நினைத்துக் கொள்வாராம். இவ்வாறான சுயநீதி மனப்பான்மை அவரில் குடிகொண்டிருந்தது.

இவர் தன் அன்புப் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்கி வளர்ந்து வரும், ஒரு நல்ல புதல்வனாக இருந்தார். கிறிஸ்துவின் பிரசன்னம் நிறைந்த அந்த இனிய இல்லம், அவர் பணிபுரிந்த தகர ஆலை, பிரைநாமன் கிராமம், இயற்கையின் செழுமையும், அழகும் நிறைந்த கிராமச் சுற்றுப்புறம் ஆகியவற்றைத் தவிர, நகர வாழ்க்கை, பரந்த வெளியுலகம், அவற்றின் வாழ்க்கை முறைகள் யாவற்றையும் சற்றும் அறியாதவராகவே அவருடைய வாழ்க்கைப் பாதை அமைதியாச் சென்று கொண்டிருந்தது.

இவ்விதமாக இருபத்திரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன. **இதுவரை அவருடைய வாழ்க்கையில் எவ்வித சலனமோ, விசேஷமாகக் குறிப்பிடத்தக்க எந்த நிகழ்ச்சியோ நடைபெறவில்லை.** ***இப்போது சுமார் அவர் ஆறடி உயரம் வளர்ந்து, உடற்கட்டும், கெம்பீரமும் கூடிய சௌந்திரம் நிறைந்த ஒரு வாலிபனாக காட்சியளித்தார். அவருடைய பிரகாசம் நிறைந்த கண்களும், ஆழ்ந்து நோக்கும் பார்வையும், முகமலர்ச்சியும் அவர் இவ்வுலகில் ஓர் அசாதாரண மனிதனாகத் திகழ்வார் என்பதனை எடுத்துக்காட்டின.*** ஆண்டவரோ ரீஸ் ஹவல்ஸைத் தம்முடைய திருப்பணிக்கென்று முன்குறித்திருந்தார். இவ் வாலிபன் திருச்சபையில் தம் மகிமைக்கென்றும், அநேகரின் ஆத்தும ஆதாயத்திற்கென்றும், மிக மகத்தான சாதனைகளை நிகழ்த்தப் போகின்றார் என்பதனை அவர் அறிந்திருந்தார்.

இதுவரை வேலையில் கடின உழைப்பு, வீட்டில் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து அவர்களை மகிழ்வித்தல், தெய்வபக்தி இவற்றிலேயே திருப்தியுடன் வாழ்ந்து கொண்டிருந்த அவரது உள்ளத்தில் இப்போது வாலிபப் பிரயாத்திற்கே உரியதான ஒரு மாபெரும் அசைவு ஏற்படத் தொடங்கியது. ***அவரது மனதில் புதுமையும் சிந்தனை அலைகளும் கரைபுரண்டோடும் நிலைக்கு இலட்சியங்களும் அவருடைய வாலிப உள்ளத்தில் உருப்பெறத் தொடங்கின.*** அக் காலத்தில் தென் வேல்ஸ் மாநில வாலிபர்களுக்கு அமெரிக்க ஐக்கிய நாடு வாக்குத் தத்தம் நிறைந்த ஒரு தேசமாக அவர்கள் மனக்கண்கள் முன் தோன்றியது. அங்கே தாராளமாக வேலை வாய்ப்புக்களும், உல்ல ஊதியம் பெறும் சாத்தியமும் இருந்தன. இங்கே தங்கள் தாய்நாட்டில் வறுமை, பற்றாக்குறையினின்றும் மீளமுடியாத நிலையிலிருந்த அவர்களுக்கு அமெரிக்காவின் சுபிட்சமும், செல்வமும் ஒரு புதிய வாழ்க்கை பாதையைக் காட்டி அழைப்பதாக தோன்றியது. பிரைநாமன் கிராமத்திலிருந்து அனேக இளைஞர்கள் கடல் கடந்து அங்கே சென்று பொருளீட்டத் தலைப்பட்டனர்.

இவ்விதம் அமெரிக்கா சென்றவர்களிடமிருந்து தங்கள் உழைப்புக்கு தகுந்த நல்ல பலன் கிடைப்பதாகவும், அவர்கள் கைநிறைய பணம் சம்பாதித்து வசதியுடன் வாழ்ந்து வருவதாகவும் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. **இதையெல்லாம் கேள்விப்பட்ட ரீஸ்ஹவல்ஸ் தானும் அமெரிக்கா சென்று, வேலை செய்து பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற பேராவல் கொண்டார்.** தன்னை அருமையாய் நேசித்த பெற்றோரையும், அன்பு நிறைந்த அவ்வில்லத்தையும் விட்டுப்பிரிய வேண்டியிருக்கின்றதே என்று முதலில் அவர் திகைத்த போதிலும், பண ஆசை அவர் உள்ளத்தை மேற்கொண்டது. தீவிர சிந்தனைக்குப் பின் அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டியதே என்ற உறுதியான முடிவுக்கு வந்தார். ஏற்கனவே அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரான (Cousin) ஈவான் லூயிஸ் (Evan Lewis) என்பவர் இரும்பு சுரங்கங்களும், இரும்பு ஆலைகளும் நிறைந்த நியூகாசில் (New Castle)

என்ற புறநகர் பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்தார். விரைவிலேயே ரீஸ்ஹவல்ஸ் கப்பல் பிரயாணம் செய்து அமெரிக்கா சென்று ஈவானுடன் சேர்ந்து கொண்டார். சீக்கிரத்தில் அவருக்கு ஒரு தகர ஆலையில் வேலையும் கிடைத்தது.

ஹவல்ஸ் பிரைநாமன் கிராமத்தை விட்டு அமெரிக்காவுக்கு புறப்பட சுமார் ஒரு மாதத்திற்கு முன். ஆண்டவர் அவருடன் பேசச் சித்தம் கொண்டார். அன்று ஓர் ஓய்வு நாளின் இரவு நேரம், ஹவல்ஸ் சற்று தாமதமாகவே ஆலய ஆராதனைக்கு வந்தார். ஆலயம் முழுவதும் மக்கள் கூட்டம் நிரம்பியிருந்ததால், இவர் நுழைவு வாயிலிலேயே நின்று கொண்டிருந்தார். போதகர் எபிரெயர் 12ம் அதிகாரம் முதலாம் வசனத்தை வாசித்து தமது அருளுரையை ஆரம்பிக்கலானார். "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமதித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட அந்த மனிதன், நாம் இவ்வுலகில் நம் இரட்கர் இயேசு கிறிஸ்து தேவனுக்கு சாட்சியான பரிசுத்தமும், வெற்றியும் நிறைந்த வாழ்க்கை வாழவேண்டும் என்ற சத்தியத்தை கூடியிருந்த சபையாருக்கு ஓர் அறைகூவலாக எடுத்துச் சொன்னார். இது தம்முடன் பேசும் ஆண்டவரின் சத்தம் என்று உணர்ந்த ரீஸ் ஹவல்ஸ் வெகு கவனமாக கேட்பதை அறிந்தே அப் போதகர் தனக்கு அவசியமான அருளுரை ஆற்றுவதாக ஹவல்ஸின் மனதில்பட்டது. இவர் வார்த்தைகள் ஆழமாக அவரது உள்ளத்தில் பதிந்தன. பரலோகத்திலிருந்து; ஒரு வல்லமை புறப்பட்டு வந்து தன்னை மேற்கொள்வதாக அவர் உணர்ந்தார். இது அவர் இதுவரை கண்டிராத பரவசத்தில் ஆழத்திய ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

எபிரெயர் 12:22-23இல் கூறப்பட்டுள்ள சீயோன் மலையையும், ஜீவனுள்ள தேவனுடைய நகரத்தையும் பரலோகத்தில் பேரெழுதி இருக்கின்ற முதற்பேரானவர்களின் சர்வ சங்கமாகிய சபையையும் அன்று நான் கண்டேன் என்று பெருமிதத்துடன் அவர் குறிப்பிட்டார். தன்னைச் சூழ்ந்து கொண்டிருக்கும் மேகம் போன்ற இந்த சாட்சிகள் தன்னைக் குறித்து உளவு அறிய வந்தவர்கள் அல்ல: அவர்கள் தன்னை ஊக்குவித்து பலப்படுத்துவதையே தங்கள் பணியாகக் கொண்டவர்களென்று அவர் கண்டார். இவ்விதமாக ஆண்டவரின் காக்கும் கரம் தாம் தெரிந்து கொண்ட அடியானாகிய ரீஸ் ஹவல்ஸின் மீது படிந்து, திருவசனத்தின் மூலம், பாவத்தில் விழுந்து விடாதபடி அவர் எச்சரிக்கப்பட்டார். கிறிஸ்து தன்னை முழுவதுமாக அவருக்கு வெளிப்படுத்தும் நாள் வரை மேகம் போன்ற ஆவியுலக சாட்சிகளைப் பற்றிய நிச்சயம் அவரில் கிரியை செய்து கொண்டே இருந்தது.

அமெரிக்கா சென்ற ரீஸ் அங்கே தொடர்ந்து கிறிஸ்தவ பக்திக் குரிய காரியங்களில் ஈடுபட்டு வந்தார்.

*அவர் அவ்வூரிலுள்ள திருச்சபையில் உறுப்பினராகச் சேர்ந்து ஆலய வழிபாடுகள், ஜெபக்கூட்டங்கள் இவற்றில் ஒழுங்காக பங்குபெற்று வந்தார். இவ்விதமான புறம்பான கிரியைகளில் அவர் திருப்தியுடன் இருந்தார்.* சுருங்கச் சொல்லின் தமஸ்கு சாலையில் கிறிஸ்துவைச் சந்திக்கு முன் தன்னை குற்றமற்றவனாகவும், நியாயப்பிரமாணத்தின்படி நீதிமானாகவும் கருதிக் கொண்ட பவுலைப்போலவே ரீஸ் இருந்தார். **இரட்சகர் தனக்குத் தேவை என்பதனை தன் உள்ளத்தின் ஆழத்தில் உணர்ந்து கொள்ளும்வரை எந்த மனிதனும் ஒரு புதிதான பரிபூரண ஜீவியத்தின் மேல் வாஞ்சையில்லாத நிலையிலேயே இருக்கின்றான்.** ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால் முடியாததொன்றில்லை. அவர் மனித உள்ளத்தை மாற்றி அவனில் புதிய திருப்பத்தையும், புதிய சிந்தையையும் உண்டுபண்ண வல்லவராயிருக் கின்றார். யார் அவருடைய வழிகளை அறியமுடியும்?

ஹவல்ஸின் நெருங்கிய உறவினரான ஈவான் லூயிஸ் மூலமாகவே அவருடைய உள்ளத்தில் விழிப்பைத் தூண்ட வேண்டுமென்று ஆண்டவர் சித்தம் கொண்டார் போலும். லூயிஸ் அன்பு உள்ளம் படைத்தவர். இரட்சகர் இயேசுவைத் தன் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு இரட்சிப்பின் அனுபவம் பெற்றவர். ஒரு நாள் இரவு அவர் ஹவல்ஸை நோக்கி: *"நீ மறுபடியும் பிறந்திருக்கின்றாயா?"* என்று இடியொலி போன்ற ஒரு கேள்வி கேட்டார். நிக்கொதேமுவின் நிலையிலிருந்த ஹவல்ஸ் இத்தகைய வார்த்தைகளை ஒரு போதும் கேட்டதில்லை. எனவே சகோதரனின் கேள்வியினால் வியப்பும், அதிர்ச்சியுமடைந்த அவர், *"நீங்கள் கேட்கும் கேள்வியின் கருத்து என்ன? என்னில் என்ன குறை காண்கின்றீர்கள்? நான் உங்களைப் போலவே உண்மையாகவும், நேர்மையாகவும் வாழ்கிறேனே!"* என்று பதில் சொன்னார். ஆனால் லூயிஸ், *"தம்பி, நான் கேட்கும் கேள்விக்கு நேரடியான பதில் சொல், அதாவது, நீ இரட்சிக்கப்பட்டிருப்பதாக அறிந்திருக்கின்றாயா?"* என்று விடாப்பிடியாக கேட் டார். உண்மையாகவே உள்ளத்தில் குத்துண்ட ஹவல்ஸ் அதை வெளிக்குக்காட்டிக் கொள்ளாமல், *"நான் ஒரு கிறிஸ்தவன், இதுவே எனக்கும் போதும்"* என்று பதிலளித்தார். எனினும் தன் உள்ளத்தில் ஒரு வெறுமை வியாபித்திருப்பதை லூயிஸ் கேட்ட கேள்வி உணர்த்திக்காட்ட தவறவில்லை. இதை புரிந்து கொள்ளாதது போல் பாவனை செய்த போதிலும், ஹவல்ஸிடம் குடிகொண்டிருந்த ஆன்மீக திருப்தியும் தன்னம்பிக்கையும் பலத்த ஆட்டம் கொண்டது. அவருடைய இரட்சிப்பிலும், நல் வாழ்விலும் ஆழ்ந்த அக்கறை கொண்ட லூயிஸ் திரும்ப திரும்ப இதே கேள்வியை எழுப்பினாரென்றாலும், அது பயனற்ற விவாதத்திலேயே முடிந்தது. **ஆதலால் இப்பொழுது பரிசுத்த பூமியில் தான் நான் நிற்கின்றேன் என்று அறிந்து கொண்ட ரீஸ் ஆவிக்குரிய காரியங்களில் விவாத மனப்பான்மை மிகவும் தவறானது என்று தூய ஆவியானவரின் மெல்லிய சத்தத்தினால் எச்சரிக்கப்படுவதை உணராமல் இல்லை.**

மனக்குழப்பமடைந்த ரீஸ் லூயிஸை விட்டு விலகிப்போக விரும்பி, சுமார் நூறு மைலுக்கு அப்பால் உள்ள மார்டின்ஸ் பெரி (Martin's Ferry) என்ற இடத்துக்குச் சென்று அங்கே ஒரு வேலை எடுத்துக் கொண்டார். *சகோதரன் ரீஸ் மறுபிறப்பு அனுபவத்தைப் பெறாமலும் இரட்சகர் இயேசுவுடன் ஒப்புரவு ஆகாமலும் தன்னை விட்டுப்பிரிந்து செல்கின்றானே என்று ஈவான் லூயிஸ் மிகவும் வருந்தினார்.* சென்ற இடத்திலும் ரீஸுக்கு மன அமைதி கிடைக்கவில்லை. ஆண்டவர் அவரை விடாது பின்தொடர்ந்து கொண்டே இருந்தார். லூயிஸ் கேட்ட கேள்விகள் திரும்ப திரும்ப அவர் நினைவில் எழும்பி அவர் மனை உறுத்திக்கொண்டே இருந்தன. ஆன்மீக ரீதியில் தன்னுடைய உண்மையான நிலைமையைக் குறித்து அவர் சிந்தித்துக்கொண்டே இருந்தார்.

இச் சமயத்தில் இறையியல் அறிஞர் பேராசியர் ஹென்றி ட்ரம்மாண்ட் (Henry Drummond) என்பவர் எழுதிய **"ஆன்மீக உலகில் இயற்கையின் நியதி"** என்ற நூலை வாசிக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. இது அக் காலத்தில் பெரிதும் போற்றப்பட்டு, ஆன்மீக நல்வாழ்வையும், மன சமாதானத்தையும் வாஞ்சித்த மக்கள் பலராலும் விரும்பி படிக்கப்பட்ட ஓர் அருமையான தியான நூலாகும். அதில் மனித குலத்தின் வீழ்ச்சியும் பாவ நிலைமையும், முதல் மனிதனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நடந்தது என்று விளக்கப் பட்டிருந்தது. ஆண்டவர் ஆதாமை நீ என் கட்டளையை மீறும் நாளில் சாகவே சாவாய் என்று எச்சரித்திருந்தார்.

**"அவனுடைய மீறுதலுக்குப் பின்னும் ஆதாம் அநேக ஆண்டுகள் சரீரத்தில் உயிருடன் இருந்த போதிலும் அவனுக்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பு அறுபட்டு அவன் ஆத்துமப்பிரகாரமாய் மரித்தவனாக இருந்தான். இழந்து போன இந்த தொடர்பையும், அந்நியோன்னியத்தையும் மனிதன் திரும்ப பெற வேண்டுமானால் அதற்கு பரிகாரமான பலி அத்தியாவசியம்".**

இந்தச் சத்தியம் ரீஸுடைய உள்ளத்தில் ஒரு புதிய விழிப்புணர்ச்சியை தூண்டியது. தன் அகவிருள் நீங்கி, வெளிச்சம் உதயமாவதாக அவர் உணர்ந்தார். அவர் தனக்குள்ளேயே சிந்தித்து, *"கடவுளுடன் எனக்கு தொடர்பு இருக்கிறதா? எனக்கு உண்மையாகவே ஒரு தாயார் இருக்கின்றார்கள் என்று நிச்சயமாய் அறிந்திருப்பதை போன்ற அதே அளவு என் இரட்சகர் இயேசுவைப் பற்றிய நிச்சயம் எனக்கு உண்டா? நான் என்னுடைய ஜீவியத்தில் என்னுடன் அவர் பிரசன்னமாய் இருப்பதைக் காண்கின்றேனா? அல்லது பிரார்த்தனைக் கூட்டங்களில் மாத்திரமே அவரை நினைக்கின்றேனா?*

தொடரும்...

# குறுக்கெழுத்துப் போட்டி – 47
# சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. தெசலோனிக்கே
05. ஆகோர்
06. போவாஸ்
08. தாவீது

**மேலிருந்து கீழாக**

01. தெக்கப்போலி
02. லோத்து
03. பத்மு
07. ஆதாம்

**வலமிருந்து இடமாக**

04. மூக்காடு
08. தாகோன்
11. அப்சலோம்

**கீழிருந்து மேலாக**

09. கோரேஸ்
10. சதுசேயர்
11. அபியாள்

---

# வினாவிடை - 49
# சரியான பதில்கள்

*01. அதோனிபேசேக் - நியாயாதிபதிகள் 1:6-7*
*02. யோசுவா – யோசுவா 10:12-14*
*03. ஏசாயா தீர்க்கதரிசி , எசேக்கியா ராஜாவுக்காக .*
*11இராஜா 20:1-11, ஏசாயா 38:1-8*
*04. சமாரியாவில் ஒரு ஸ்திரி – 11இராஜாக்கள் 6:28-29*
*05. வேசி – 1இராஜாக்கள் 3:16-28*
*06. அப்சலோம் – 11சாமுவேல் 18:17*
*07. ஆகான் - யோசுவா 7:25-26*
*08. ஏகூத் - நியாயாதிபதிகள் 3:15-23*
*09. பெலிஸ்தர் - நியாயாதிபதிகள் 15:6*
*10. லோத்தின் கூடாரத்திற்கு வந்த இரண்டு மனுஷரை பிடிக்க*
*ஜனங்கள் வந்த போது - ஆதியாகமம் 19:10-11*

# ஒரு வரி

பரமனின் வார்த்தை
என்றும்
பயம்படாதே

சத்தியத்தை பொய்யாக்கும்
கூட்டம்
தேவனுடையது அல்ல

தாங்கள் அழியவே
தாவீதுக்களை துரத்தும
சவுல்கள்

பிரசங்கி உருவாகிறது
கண்ணீர்
ஜெபக்களத்திலே

மறைக்கப்படும் இடங்களில்
மனிதர்களை நினைப்பவர்
மாண்புமிக்கோர்

காலங்களை வென்றது
கர்த்தரின்
சத்திய வேதம்

மிதிக்கப்படுகையில்
மதிப்பாய் வாழ்ந்தால்
உயர்வு நிச்சயமே

அச்சை அழிக்க நினைத்தாலும்
அதிகமாய் அச்சடிப்பது
வேதமே

முடியாத பொழுதும்
நம்பிக் கொண்டிருப்பது
கீழ்ப்படிவு

பிராண சிநேகிதனையும்
பிரிப்பவர்
ஆவிக்குரிய [illegible]

# அனலின் ஆன்மீக விருந்து

## கடுங்காயப்படுத்தலின் பின்
## அதிக பிரயாசங்களின் பின்
## பெரிய ஏமாற்றங்களின் பின்
## இயேசு அற்புதம் செய்தார்!

**நா**ங்கள் அனேக தடவைகள் ஜெபம் பண்ணியிருக்கின்றோம். அனேக விண்ணப்பங்களை அவருடைய பாதத்தில் வைத்திருக்கின்றோம். ஆண்டவரை நம்பி ஆண்டவர் பக்கமாய் வந்த நாம் கர்த்தரிடம் அதிகமான காரியங்களை எதிர்பார்த்திருக் கின்றோம். நாம் கர்த்தரிடம் கேட்ட காரியங்களுக்கு பல வேளைகளில் பதிலே வராமல் இருக்கலாம். சில வேளைகளில் தேவனிடத்தில் நாம் கேட்ட ஜெபத்திற்கு, விண்ணப்பத்திற்கு, ஏக்கத்திற்கு அல்லது எங்களுடைய பாரத்திற்கு உரிய நேரத்தில் பதில் வராமல் போயிருக்கலாம். அல்லது இன்னொரு மனிதருடைய வார்த்தை உங்கள் உள்ளத்தை காயப் படுததி இருக்கலாம் அல்லது நீங்கள்ஒரு நபர்உங்களுக்கு இந்த காரியத்தை இந்த நாட்களுக்குள்ளே செய்வார் என்று எதிர்பார்த்திருக்கின்ற வேளையிலே அந்தக் காரியம் செய்யப்படாமல் விடப்பட்டிருக் கலாம்.

இப்படி எதிர்பார்ப்புக் களும், உங்களின் நம்பிக்கைக ளும் உடைந்து போய் உங்களுக்கு நடக்க முடியாத காரியங் களாக இவை தெரிந்து கொண் டிருக்கலாம். **ஆனால் பரிசுத்த வேதாகமத்தின்படி இயேசு கிறிஸ்து வும் சில காரியங் களை செய்திருக் கின்றார் மனிதர்களுக்கு சில**

**ஏமாற்றங்களின் பிற்பாடு அவர்களை ஆசீர்வதித்து இருக்கின்றார். சில காயப்படுத்தல்கள் அல்லது இருதயத்தை நோகப்படுத்திய பிற்பாடு அற்புதத்தை செய்திருக்கின்றார். அல்லது எதிர் பார்த்த நாட்களைவிட இன்னும் அதிகமான நாட்களுக்கு பின்புதாய் காரியத்தை செய்திருக்கின்றார்.** ஆகவே இதிலிருந்து நாங்கள் என்னத்தை கற்றுக் கொள்ள வேண்டுமென்றால்: சிலர் இவ்விதமாக கூறுவார்கள்: தேவனுடைய இந்த வார்த்தை இவ்விதமாக என்னுடைய இருதயத்தைக் குத்திவிட்டது. நாங்கள் சாதாரணமாக மனுஷீகத்திலே பார்க்கின்ற போது இந்த மனிதருடைய பேச்சு என்னை குத்திவிட்டது என்று யோசிக்கலாம். ஆனால் இன்றைக்கு நாங்கள் ஆராய்ந்து பார்ப்போம், சில வேளைகளில் தேவன் எம்மைக் குத்தும்படி அனுமதிப்பார். இன்னும் சில வேளைகளில் நாங்கள் நம்பினவர்கள் நம்பிக்கைத் துரோகம் பண்ணிவிட்டார்கள் என்று யோசிக்கலாம். **ஆனால் தேவன் ஆசீர்வாதம் தரும்படியாய் அவைகளை எங்களுக்கு அனுமதிக்கின்றார்.**

ஒரு வேளை நீங்கள் சோர்ந்து போய் இருக்கலாம். ஆனால் நீங்கள் நாட்கள் செல்லச் செல்ல ஆண்டவர் உங்களுக்கு செய்த காரியங்கள் நன்மைக்கே என்று கூறுவீர்கள். ஆகையினாலே இயேசு கிறிஸ்துவினால் காயப்படுத்தப்பட்டவர்களைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம். இயேசு காயம் கட்டுகின்றவர் என்று தான் உங்களுக்குத் தெரியும், இயேசு அணைக்கின்றவர் என்று தான் உங்களுக்குத் தெரியும், இயேசு எங்களைத் தேடிவந்த வர் என்று தான் தெரியும். **ஆனால் இயேசு எங்களைக் காயப் படுத்துகின்றவர், இயேசு எங்களை விட்டுத் தூரம் போயிருக்கின்றார். இயேசு பிந்தி வந்திருக்கின்றார். எங்கள் வாழ்க்கையில் செய்யப்பட வேண்டிய காரியத்தை நாங்கள் எதிர் பார்த்த நேரத்தில் செய்யாமல் சில வேளைகளில் தாமதித்தே அவற்றை செய்திருக்கின்றார்.** அதைப் பார்க்கின்ற போது எங்களுக்குள்ளே ஒரு ஆறுதல் வரும். எனவே தொடர்ந்து ஆராய்ந்து பார்ப்போம்.

## 01. கடும் காயப்படுத்தலின் பிற்பாடு இயேசு அற்புதம் செய்தார்.

**மத்தேயு 15:22-28 (22.) அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள். 23. அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு**

**வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். 24. அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார். 25. அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். 26. அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். 27. அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். 28. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.**

இங்கே ஏற்ற ஒரு சரியான விண்ணப்பத்தை அந்த ஸ்திரி இயேசுவிடம் வைக்கின்றாள். என்னுடைய மகள் பிசாசினால் கொடிய வேதனைப் படுகின்றாள், என்று சொல்லி ஆண்டவரைக் கூப்பிடுகின்றாள். அப்பொழுது அவர் அதற்கு பதிலாக ஒரு வார்த்தையும் சொல்லவில்லை என்று வேதம் கூறுகின்றது. இயேசு குணப்படுத்துகின்றவர் தானே, இயேசு விடுதலை கொடுக்கின்றவர் தானே. இந்தப் பெண் அதனைத் தான் நினைத்து வந்தாள். **ஆனால் முதலாவதாகவே அவள் நம்பி வந்த நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் உடைக்கப்பட்டது.** சீஷர்கள் சொல்லுகின்றார்கள், இவள் நம்மை பின் தொடர்ந்து கூப்பிடுகின்றாளே! அதற்கு அவர் கூறினார்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயல்லாமல் மற்றப்படியல்ல வென்றார் அப்படி என்றால் இந்தப் பதிலைக் கேட்ட கானானிய ஸ்திரியுடைய இருதயம் எவ்விதமாக உடைக்கப்பட்டிருக்கும். இயேசுவை நம்பி வந்தேனே, இவா என்னைக் கைவிடுகின்றாரே, என் சத்தத்தைக் கேட்கவில்லையே. **அவள் இயேசுவிடம் வந்த அந்த நேரம் தொடக்கம் இயேசு அவளுடைய மகள் சுகமடைந்தாள் என்று சொல்லும் வரைக்கும் அவளுடைய இருதயம் காயப்படுத்தப்பட்டுக் கொண்டேயிருந்தது. குத்தப்பட்டுக் கொண்டேயிருந்தது. நம்பிக்கையீனம் வரக்கூடிய செயல் நடந்து கொண்டேயிருந்தது.** அவள் அப்படிப்பட்ட காரியத்திற்குள்ளாய் செல்லும்படியாய் இயேசு அவளை அனுமதித்தார்.

**இயேசு கைவிடுகின்றவரே இல்லை! இயேசு குணமாக்கமுடியா**

**தவரா? இல்லை, இயேசு இரட்சிக்க முடியாதவரா? இல்லை. அப்படியென்றால் இயேசு ஏன் உடனடியாக சுகம் கொடுக்கவில்லை.** பிரியமானவர்களே, ஆண்டவர் எங்கள் எல்லாரிடமும் தன்னுடைய அந்த உறவின் எல்லைக்குள் வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். அடுத்து பாவம் செய்கின்றவர்களுடைய பாவத்தை உணர்த்தும்படியாய் காரியங்களை செய்கினறவர். **தேவன் மனிதர்கள் மீது கொண்ட நேசத்தினால் அவர்கள் தன்னிடம் வந்து நெருங்கி சேரும்படியாய் அவர் எதிர்பார்க்கின்றார்.** அதன் பிற்பாடு அற்புதத்தைக் காணலாம். இங்கே அவளுடைய எதிர்பார்ப்பு உடைக்கப்பட்டு விட்டது. இவளுடைய இருதயம் காயப்படுத்தப்பட்டு விட்டது. இவள் வேதனை மேலே வேதனை அடைந்து கொண்டேயிருக்கின்றாள். துன்பத்தின் மேலே துன்பம், இவள் தன்னுடைய மகளின் வேதனையை சொல்லும்படியாய் வந்தாள். விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்த்தாள். ஆனால் இங்கே காரியம் எதிர் மாறாய் நடந்து கொண்டிருந்தது. **ஆனாலும் ஆண்டவர் கைவிடாதவர். அவர் காயப்படுத்திக் கட்டுப்போடுகின்றவர்.**

**அவர் ஏன் காயப்படுத்துகின்றார்? அவர் ஏன் குத்துகின்றார்? அவர் ஏன் நோகும்படியாய் எங்களை தண்டிக்கின்றார்? அவர் அவ்வாறு செய்வது நாம் அழியும்படியாய், எங்களுக் குத் தீமை வரவேண்டும் என்று விரும்பினபடியால் அல்ல, நாங்கள் வாழ வேண்டும், நாங்கள் தன்னோடு இணைய வேண்டும், தன்னிடத்திலிருந்து ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும் என்பதற் காகவே தேவன் பல வேளைகளில் எங்களை சிட்சித்து, எங்களை குத்தி, எங்களை தண்டித்து, எங்களை அடித்து, எங்களை நொறுக்கி வார்த்தையினாலே எங்களைக் காயப்படுத்தி தன்னுடைய வழியிலே எங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றார்.** உங்களை யாராவது நோகப்படுத்தினால் கவலைப்பட வேண்டாம். அது கர்த்தர் அனுமதித்த செயல். இயேசுவே உங்களை நோகப்படுத்தியிருக்கின்றார். இயேசு அந்த ஸ்திரிக்கு இதை விடவும் மிக மோசமான ஒரு பதிலை கொடுத்தார். **மத்தேயு 15:26 அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.** இவ்விதமாக உங்களுக்கு யாராவது பதில் கொடுத்தால் உங்களுடைய இருதயம் எவ்விதமாக உடைக்கப்படும். அவள் கேட்கின்றாள்: என்னுடைய மகளுக்கு சுகம் வேண்டும். அவர் சொல்லுகின்றார்: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல என்றார். அப்படியென்றால் அதன் அர்த்தம் என்ன? மறைமுகமாக அவர்

களை நாய் என்று சொல்லுகின்றார். உங்களுக்கு இப்படியொரு வார்த்தை சொல்லியிருந்தால் நீங்கள் உடனே என்ன சொல்லியிருப்பீர்கள். இப்படி ஒரு வார்த்தையை அவர் கூறிய பிற்பாடு, இவரிடம் இருந்து ஆசீர்வாதத்தைப் பெறத்தான் வேண்டுமா? இந்த ஆசீர்வாதம் எங்களுக்குத் தேவையில்லை என்று சென்றிருப்பீர்கள். அதன் பிற்பாடு அந்த இடத்திலே நிற்பதற்கு எமக்கு விருப்பம் வராது. ஆனால் அந்த ஸ்திரி என்ன சொல்லுகின்றாள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்.

**ஆண்டவர் செய்த அற்புதங்களை நீங்கள் பார்த்தால், ஒரு மறைமுகமான அல்லது வெளிப்படையான நிபந்தனையின் பிற்பாடு தான் இயேசு சுகம் கொடுக்கின்றார்.** குருடனைக் கேட்கின்றார்: நீ விசுவாசிக்கின்றாயா? சில வேளைகளில் சுகம் கொடுத்ததற்கு பிற்பாடு ஆண் டவர் ஏதாவது ஒரு நிபந்த னையை வைத்துத்தான் அனுப்புகின்றார். **போ! இனிப்பாவம் செய்யாதே!** தேவனுக்கு எங்கள் மீது இருக்கின்ற கருணையின் வெளிப்பாடுதான் இது. பெற்ற சுகத்தோடு நாம் சென்று அழியக்கூடாது. பெற்ற சுகத்தோடு சென்று நாம் வாழ வேண்டும். இரட்சிப்பை பெற்ற பின்பு நாங்கள் நாசமடையக் கூடாது. அந்த இரட்சிப்பின் வழியிலே நடக்க வேண்டும். அதற்காகத் தான் தேவன் இப்படி யான காரியங்களைக் கொண்டு வரு கின்றார். இங்கே இவளுக்கு சுகத்தைக் கொடுப்பதற்கு முன்பதாகவே தேவன் இவளுடைய விசுவாசத்தை பரீட்சிக்கின்றார். இவளுடை விசுவாசத்திலே பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தினார். விசுவாசத்திற்கு பெரியதொரு இடி விழுந்தது. அவள் சொன்னாள்: மெய்தான் ஆண்டவரே, அப்படியென்றால் அவள் என்ன நினைத்தாள் தெரியுமா? *ஆண்டவரே நீர் என்னை எப்படி பார்க்கின்றீரோ அப்படி நான் என்னை ஏற்றுக் கொள்கின்றேன். அவர் அவளை எப்படிப் பார்த்தாரோ அவள் அப்படி தன்னை தாழ்த்தினாள். ஆண்டவரை எதிர்க்க அவள் விரும்பவில்லை.*

**அவர் தேவன், அவர் சர்வ வல்லவர் என்று அவளுடைய விசுவாசம் பெருகியது, வளர்ந்தது.** அவள் சொன்னாள்: மெய்தான் ஆண்டவரே இது எவ்வளவு போற்றப்பட வேண்டிய வார்த்தை. கீழ்ப்படிவின் வார்த்தை. *கானான் சந்ததியுடைய ஆரம்பத்தை பார்த்தால், தகப்பனுடைய நிர்வாணத்தைப் பார்த்தவர்கள். அதனாலே வந்த சந்ததிதான் இந்த சந்ததி. தேவன் அந்த சந்ததியின் பாவத்தை உணர்த்தும்*

படியாய் இங்கே இந்த வார்த்தைகளைச் சொல்லி இருக்கலாம். காயப்படுத்தி ஆண்டவர் உங்களுக்கு கட்டுப்போடுவார். ஆண்டவர் உங்களை நோகப்பண்ணி, உங்களுடைய நோவை மாற்றுவார். ஆண்டவர் உங்களைத் தண்டித்து, தண்டனையிலிருந்து உங்களை விடுவிப்பார். ஆண்டவர் உங்களை குத்தி உங்களுக்குள் இருக்கும் அழுக்குகள் எல்லாவற்றையும் எடுப்பார். இது தான் அவருடைய குத்தும் வார்த்தைகள். பிள்ளைகளின் அப்பத்தை நாய்க்குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல. இது ஆண்டவர் அன்பினாலே சொன்ன வார்த்தை. நேசத்தினாலே சொன்ன வார்த்தை. வாழும்படியாய் சொல்லப்பட்ட வார்த்தை. அவளுடைய விண்ணப்பத்தைக் கேட்கும்படியாய் அவள் தன்னோடு நெருங்கி உறவாடும் நிலைக்குள்ளாய் வரும்படியாக தேவன் சொன்ன வார்த்தை.

உங்களுக்கு வியாதி, வேதனை வருகின்ற பொழுது சோர்ந்து போகாதிருங்கள். சில வேளை எங்களுக்கு வருகின்ற ஒரு வியாதியின் நிமித்தம் ஊசி போடவேண்டி நேரிடும். அந்த ஊசி எங்களுக்கு வலியைக் கொடுப்பதாய் இருந்தாலும், அதன் பிற்பாடு எங்களுக்கு ஆரோக்கியம் உண்டாகின்றது. அந்த ஆரோக்கியத்திற்காக நாங்கள் சில பாடுகளுக்குள்ளாக செல்லத்தான் வேண்டும். சில வேளை அந்த சந்தர்ப்பங்களிலே கண்ணீர் வரும். வேதனையாக இருக்கும். நோவு உண்டாகும். பயமாக இருக்கும். பாடுகளுக்குள் ளாக செல்ல வேண்டும். அப்போது தான் எங்களுக்கு ஆரோக்கியம் கிடைக்கும். எங்களுக்கு நன்மை கிடைக்கும்.

சில வேளை தேவன் உங்களை எதிர்பாராத விதத்திலே நோகப்படுத்தியிருந்தால் அது உங்களுடைய நன்மைக்குத்தான். நீங்கள் வாழ வேண்டும், மற்றவர்கள் உங்களை நோகப் பண்ணுவது நல்லது. உங்களுக்கு ஒரு காயம் ஏற்படுகின்ற போது நீங்கள் மருந்து கட்டும்படியாக வைத்தியரிடம் செல்கின்றீர்கள். அப்பொழுது வைத்தியர் உங்களுக்கு வலிக்காதபடி அவர் மருந்து கட்டுவாராக இருந்தால் உங்களுடைய காயத்தில் இருந்து உங்களுக்கு சுகம் கிடைக் குமா? இல்லை. அவர் உங்களுக்கு வலி ஏற்படுவதனைப் பார்க்காமல் அந்தக் காயத்தை துப்புரவு செய்து மருந்து கட்டும் போது அந்தக் காயத்திலிருந்து சுகம் கிடைக்கும். உங்களை நோகப் படுத்தினாலும் கவலைப் படாதிருங்கள். ஏனென்றால் உங்களுக்கு சுகம் கிடைப்பதற்காகவே அவ்விதம் நடைபெறுகின்றது.

எனவே தேவன் உங்களை நோகப்படுத்தியிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால் அது உங்களுடைய நன்மைக்குத்தான். உங்களுடைய காயம் ஆறப் போகி

ன்றது. உங்களுடைய காயம் குணமாகப் போகின்றது. உங்களுடைய பிரச்சினை தீரப் போகின்றது. ஆகவே தான் தேவன் அதற்கு முன்பதாக உங்களை நோகப்படுத்துகின் றார். தேவன் உங்களைக் குத்து கின்றார். அவருடைய வார்த்தைகள் உங்களை ஊசி போல் குத்தும். ஆகவே உங்கள் முழு இருதயத்தோடும் ஏற்றுக் கொள்ளுங்கள். இனி ஆண்டவர் என்னை நோகப்படுத்தினாலும் ஏற்றுக் கொள்ளுவேன். சில வேளை நீங்கள் நினைக்கலாம், ஆண்டவர் நேரே வந்து உங்களை நோகப படுத்துவார் என்று. அப்படியல்ல ஆண்டவர் இன்னொரு மனிதனையே பயன்படுத்துவார். **உங்கள் ஊழியர்களைப்பயன்படுத்துவார். உங்களுடைய போதகரைப் பயன்படுத்தலாம். இவர்களே உங்களை நோகப்படுத்துவார்கள். இவர்களுடைய அழைப்பு என்ன? உங்களை நோகப்படுத்தி ஆண்டவரோடு உங்களை நெருங்கி சேரவைப்பது.** ஏனென்றால் நாங்கள் சுகம் பெற்று, காயம் ஆறி கர்த்தர் விரும்பும்படியாய் வாழ வேண்டும்.

இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கலாம். ஆனால் அன்றைக்கு அந்த ஸ்திரிக்கு இது நடந்தது. இப்படி எங்களுக்கும் நடக்க வேண் டும். அப்படி நடந்தால் தான் நாங்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ முடியும். கறை, திறை பிழையற்ற கிறிஸ்தவர்களாய் வாழ்வதற்கு நாங்கள் முதலாவது நோகப்படுத்தப் பட வேண்டும். நாங்கள் அற்புதங்களைக் கண்டு கொள்வதற்கு முதலாவது காயப்படுத்தப்பட வேண்டும். முதலாவது அவர் அந்த ஸ்திரியை காயப் படுத்தி, பிற்பாடு என்ன செய் கின்றார்: இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: *"ஸ்திரியே, உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார்".*

**ஆண்டவருடைய இந்தப் பதில் வருவதற்கு முதல் அந்த ஸ்திரி போன பாதை அது வேதனை, துன்பம், கேட்ட ஒவ்வொரு வார்த்தைகளும் இவளை பாடுபத்தும் வார்த்தைகள். இதற்கு பிறகு அவர் கொடுத்த ஆசீர்வாதம் பெரிது.** பிரியமானவர்களே, இப்படியாய் தேவன் எங்களுடைய காரியங்களை சந்திக்கும் வரைக்கும், எங்களுடைய ஏக்கங்கள் தீரும் வரைக்கும் நாங்கள் தேவன் நடத்துகின்ற வழியிலே பொறுமையாய் காத்துப்போக வேண்டும். எங்களைத் தேவன் ஆசீர்வதிக்கும் வரைக்கும் அவருடைய வழியிலே அவர் அனுமதிக்கும் எல்லாவற்றுக்குள்ளாயும் சகித்துச் செல்ல வேண்டும். அதன்

பிற்பாடு எங்களுக்கு பெரிய ஆசீர்வாதம்.

ஆகவே ஆசீர்வாதங்கள் இதுவரைக்கும் அடைபட்டிருக்கின்றது என்று சொன்னால், சில வேளைகளில் பாருங்கள் தேவன் விரும்பின அளவு கீழ்ப்படிவு, விசுவாசம் இல்லாதிருக்கலாம். அதை எங்களுக்குள்ளே உருவாக்குவோம். அற்புதத்தை அதன் பிற்பாடு நீங்கள் காண்பீர்கள். **எங்கள் இயேசு அற்புதங்களின் இயேசு** முதலாவது **ஆண்டவர் செய்த காரியம் ஒரு கடும் காயப்படுத்தலின் பிறபாடு ஆண்டவர் அற்புதம் செய்தார்.** இந்த கானானிய ஸ்திரி படுகாயம் அடைந்தாள். அந்த காயத்தின் மத்தியிலும் விசுவாசத்தோடு கேட்டாள். அவள் கேட்டதை ஆண்டவர் கொடுத்தார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

## 02. கடுமையான முயற்சி, பிரயாசங்களின் பிற்பாடு இயேசு அற்புதம் செய்தார்.

**மத்தேயு 15:29-30 (29.) இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாக் கடலருகே வந்து, ஒரு மலையின்மேல் ஏறி, அங்கே உட்கார்ந்தார். 30. அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள் அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்.** இந்த சம்பவத்தை நாம் பார்க்கும் போது ஆண்டவர் மலையின் மேல் ஏறினார். உண்மைக்கு நாங்கள் பார்ப்போமாக இருந்தால், இந்த குருடர், சப்பாணிகள், ஊமையர்கள் இவர்களைக் கண்டு இயேசு இறங்கி வந்திருக்க வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்டவர்களால் மலையிலே ஏறமுடியுமா? முடியாது. உண்மைக்கு அவர் அவர்களை சொஸ்தமாக்கிவிட்டு பிற்பாடே மலையில் ஏறியிருக்க வேண்டும். ஆனால் இயேசு மலையின் மேல் ஏறி உட் கார்ந்தார். ஊமையர்களை, சப்பாணிகளை, ஊனர்களை கொண்டு போகவேண்டும். இவைகள் சாதாரண காரியம் அல்ல. அதற்கு அவர்கள் கடும் முயற்சி எடுக்க வேண்டும். இதைப் போன்று நாமும் இயேசுவிடம் போவதற்கு முயற்சி பண்ண வேண்டும்.

கண் தெரியாதவர்களை மலையிலே ஏற்றுவது எவ்வளவு கடினமான காரியம். காது கேளாதவர்களை மலையிலே ஏற்றுவது எவ்வளவு கடினமான

காரியம். கொண்டு போகிறவர் கள் மெதுவாய் கொண்டு போக வேண்டும். ஞானமாய் கொண்டு போக வேண்டும். இதற்குப் பிற்பாடு தான் அற்புதம். இது கடினம் தான். ஆனால் ஆண் டவர் நீங்கள் அவரிடம் நெருங்கி வரவேண்டும் என்றே எதிர் பார்க்கின்றார். நாங்கள் குருடராய் இருக்கலாம், செவி டராய் இருக்கலாம், சப்பாணி யாய் இருக்கலாம் அது எல்லாம் ஆண்டவருக்கு தெரி யும். ஆனாலும் ஆண்டவர் உங்களை அப்படியே வரும் படியாகவே அழைககின்றார்.

**உங்களுடைய வாழ்க்கை யில் அற்புதம் நடக்கவில்லை. சுகம் கிடைக்கவில்லை ஏன் தெரியுமா? நீங்கள் பிரயாசப்பட்டு, முயற்சி எடுத்து இயேசுவுக்கு அருகில் போக வில்லை.** இயேசுவுக்கு முடியும் சுகப்படுத்த ஆனால் அவர் சுகம் கொடுப்பதற்கு முதல் உங்களி டம் இந்த செயற்பாட்டை எதிர்பார்க்கின்றார். நாங்கள் இயேசுவை முழு முயற்சியுடன் தேடவேண்டும். சிலர் அதிக பிரயாசப்பட்டு தேவாலயம் வருவார்கள். சிலர் தேவாலயம் வருவதையே கடினமாக எண் ணுவார்கள். சில வயது முதிர்ந் தவர்கள் ஒவ்வொரு ஞாயிறும் தவறாது தேவாலயம் வருகின் றார்கள். அவர்கள் வீடு திரும்பும் போது தேவபெலத்தோடு வீடு திரும்பு வார்கள். இது தான் கடும் முயற்சி. ஆனால் சில வாலி பர்கள் ஒரு சின்ன தலையிடி என்றால் கூட தேவாலயம் வர மாட்டார்கள். அவர்களுக்கு பெலன் உண்டு, ஆனால் அவர் கள் முயற்சி பண்ணுவதில்லை.

எனவே நாம் கடினப் பட்டு மலையிலே ஏறவேண் டும். *எங்களால் துதிக்க முடியாமல் இருக்கும், ஜெபிக்க முடியாமல் இருக்கும். ஆனால் நீங்கள் முயற்சி பண்ணி துதித்தால், முயற்சி பண்ணி ஜெபித்தால் நீங்கள் கிட்டப்போக உங்களுக்கு ஜெபிக்க இருந்த தடையெல்லாம் மாறிப்போகும்.* ஏனென்றால் நீங்கள் ஏறி, ஏறி ஜெபம லையின் உச்சிக்குப் போனால் தான் இயேசுவைக் காணலாம். ஒவ்வொரு கிறிஸ்த வனுக்கும் இந்த ஜெபமலை யின் உச்சிக்குப் போகின்ற அனுபவம் இருக்க வேண்டும். இந்த அனுபவத் திற்கு நீங்கள் எங்கும் ஓடித்திரியத் தேவை யில்லை. நீங்கள் முழந்தாலில் நின்றால் மலையிலே ஏறலாம். நீங்கள் முழங்கா லில் இருக்கும் போது இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார். அப்ப டியே ஆண்டவரோடு நெருங்கி, நெருங்கி, கிட்டப்போங்கள். அங்கே இயேசு இருப்பார்.

நீங்கள் ஜெபியுங்கள், நீங்கள் ஜெபித்து ஜெபத்தின் உச்சக்கட்டத்திற்கு போகின்ற பொழுது தேவன் உங்களுடைய ஜெபத்தை நிச்சயமாய் கேட்பார். உங்களுடைய ஜெபத்திற்கு பதில் வரும். எந்த தடை வந்தாலும் தடைகளையெல்லாம் உடைத்து நீங்கள் ஜெபத்திற்கு நேரம் கொடுங்கள்.

முயற்சிபண்ணி வேதத்தை வாசியுங்கள். வேதாகமத்தை தியானியுங்கள். தேவனுடைய காரியத்திற்காக உங்களை முழுமையாய் அற்பணியுங்கள். உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காய் தேவனிடம் உங்களை அர்ப்பணியுங்கள். இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார். **ஆண்டவர் நீங்கள் தனக்கு கிட்ட வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். இயேசுவுக்கு கிட்டவாக வாருங்கள். அவர் என் பிள்ளை எனக்கு கிட்ட வரவேண்டும். என் பிள்ளையை நான் தொட வேண்டும், என் பிள்ளையை ஆசீர்வதிக்க வேண்டும் என விரும்புகின்றார். எனவே அவர் நீங்கள் கிட்ட வருவதை விரும்புகின்றார். இயேசுவை நெருங்கிச் சேருங்கள். மற்றவர்களையும் கொண்டு வாருங்கள். அன்று மலையின் மேல் உட்கார்ந்திருந்த இயேசுவிடம் அதிக பிரயாசமெடுத்து வந்த மக்களுக்கு இயேசு அற்புதம் செய்தார்.**

## 03. பெரிய ஏமாற்றத்தின் பின் இயேசு அற்புதம் செய்தார்.

**யோவான் 11:3,6 (3) அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள். (6) அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்.** மார்த்தாளும் மரியாளும் தங்களுடைய சகோதரன் வியாதியாயிருந்த போது இயேசுவிடம் ஒரு செய்தி அனுப்பினார்கள். நீர் சிநேகிக்கின்றவன் வியாதியாயிருக்கின்றான். அப்படியென்றால் வியாதிப்பட்ட அந்த லாசருவைப் பார்க்க என்ன செய்திருக்க வேண்டும். அவர் உடனே வந்திருக்க வேண்டும். ஆனால் இயேசு அதைக் கேட்ட போது இந்த வியாதி மரணத்திற்கேதுவாய் இராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாய் இருக்கிறது, தேவனுடைய குமாரனும் இதில் மகிமைப்படுவார் என்றார்.

இயேசு மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோ

தரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாய் இருந்தார். அவன் வியாதியாயிருப்பதாக அவர் கேள்விப்பட்ட போது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கினார். இது ஒரு நம்பிக்கைத் துரோகம். ஒரு கடும் வியாதி, இயேசு வந்திருக்க வேண்டும் என்றே நாம் நினைப்போம். ஆனால் இயேசு வரவில்லை. இயேசு ஏமாற்றி விட்டார், ஆபத்திலே வராத இவர் ஆண்டவரா? இந்த துக்கத்திலே இவர் வரவில்லை, நடந்தது என்ன? லாசரு மரித்து விட்டான். கல்லறையிலே வைக்கப்பட்டாயிற்று, உண்மைக்கு எங்களாலே இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது பிழையான காரியம் என்றே நாங்கள் நினைப்போம். ஆனால் ஆண்டவர் சொன்னார், இந்த வியாதி மரணத்திற்கேதுவாய் இராமல், தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கின்றது.

நாங்கள் எதிர்பார்த்த சில காரியங்கள் நடப்பதற்கு கால அவகாசம் வைப்போம், இந்தக் காலத்திற்குள்ளே எனக்கு இந்தக் காரியம் நடக்க வேண்டும், இந்தக் காலத்திலே நான் இப்படி இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் நான் இந்த விதத்தில் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாய தான் இருக்கின்றீர்கள். ஆனால் சில வேளைகளில் நீங்கள் நினைத்த காரியங்கள், நீங்கள் நினைக்கும் வேளைகளிலே நடக்காது. அதனால் கர்த்தர் உங்களை கைவிட்டு விட்டார். கர்த்தர் உங்களை நினைக்கவில்லை என்று நினைக்க வேண்டாம். ஆண்டவர் தன்னை நம்பின பிள்ளைகளுக்கு ஒரு போதுமே நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டார். **அப்படி ஏதாவது உங்களுக்கு நடக்கின்றது என்றால் அது தேவனுடைய நாமம் மகிமைப்படுத்துவதற்கு ஏதுவாகவே நடக்கின்றது என்பதனை புரிந்து கொள்ளுங்கள். அவர் உங்களுடைய நன்மையின் நிமித்தமாய் தாமதிக்கலாம்.**

*சில நாட்களுக்கு முன்னதாய் ஒரு தாயார் கண்சத்திர சிகிச்சை செய்து வைத்திய சாலையில் இருந்தார். அந்த தாயார் தான் வைத்திய சாலைக்கு போவதாக என்னிடம் சொன்னதாக சொன்னார். ஆனால் நான் அதை மறந்து போய்விட்டேன். இது அந்தத் தாயாருக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுத்தது. இதை அவர் வேறு ஒருவரிடம் சொல்லிக் கவலைப்பட்டிருக்கிறார் அந்த நபர் என்னிடம் இதைச் சொன்னார். அதன் பிற்பாடு நான் போதகரிடம் சென்று சொன்னேன். போதகரே இப்படியாக இந்தத் தாயார் கண் சத்திரசிகிச்சை செய்து வைத்தியசாலையில் இருந்து இப்போது வீடு சென்று விட்டார் என்று நான் சொன்ன போது போதகர் சொன்னார் அப்படியென்றால் ஒரு இரண்டாயிரம் ரூபாய் எடுத்துக் கொடுங்கள் உண்மைக்கு நான் சொன்னது ஒரு தாயார் ஆனால் அதே பெயரில் உள்ள வேறொரு தாயாருக்கே போதகர் சொல்லியிருந்தார். பிறகு நான் அந்த தாயாரைக் குறித்து விளக்கிச்*

*சொன்ன போது, அந்த தாயாருக்கு ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்றார். அந்த ஆயிரம் ரூபாவை நான் கொடுத்த போது அந்த தாயாருக்கு மிகுந்த சந்தோஷம். அவர் சொன்னார்: ஏன் தம்பி இந்த பெரிய தொகையை என்னிடம் தருகின்றீர்கள் என்றார். நான் உடனே சொன்னேன், போதகர் உங்களிடம் கொடுக்கச் சொன்னார் என்று சொன்ன போது அந்த தாயாரின் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது.*

அப்பொழுது தான் நான் யோசித்தேன், நான் வைத்திய சாலைக்கு சென்று முன்பே அந்த தாயாரை பார்த்திருந்தால் பணம் கொடுத்திருக் கமாட்டேன். நான் சென்று உடனடியாக அந்த தாயாரை பார்க்காமல் விட்டது நல்லது. எனவே உங்களை யாரும் வைத்திய சாலையிலே வந்து பார்க்க வில்லை என்றால் கவலைப்படாதீர்கள். கோபம் கொள்ள வேண்டாம். பிற்பாடு உங்களுக்கு நன்மை உண்டு. நீங்கள் சந்தோஷமாக கர்த்தாவே உமக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லுங்கள். அதற்கு பிற்பாடு உங்களுக்கு எஓல்லாம் கூட்டி வழங்கப்படும். **எங்களுடைய ஆண்டவர் அப்படித்தான், ஏவர் பிந்தினாலும் செய்து முடிப் பார். அவர் தாமதித்தாலும் செய்து முடிப் பார். அவர் தாமதித்தாலும் அவர் நினைத்த காரியங்கள் உங்களுடைய வாழ்விலே நடக்கும்.** நீங் கள் எதிர் பார்த்த நபர்கள் உங்களை ஏமாற்றி விட்டார்களா? கலங்க வேண்டாம். இயேசு உங்களை ஏமாற்றமாட்டார். சில வேளை உங்கள் வாழ்க்கையில் நடக்க வேண்டிய சில காரியங்களைத் தேவனே தடைபண்ணுவார். ஏன் உங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தைவிடக் கூடுதலாக உங்களுக்கு கிடைக்க வேண் டும் என்பதற்காக.

*மார்த்தாளும் மரியாளும் எதிர்பார்த்தது லாசரு வியாதியாய் இருக்கின்ற பொழுது ஆண்டவர் வந்து குணமாக்க வேண்டும். ஆனால் இயேசு வரவில்லை.* மரித்தான் லாசரு. பிற்பாடு அடக்கம் பண்ணப்பட்டான். அடக்கம் பண்ணப்பட்டு நான்காவது நாள் தான் இயேசு அங்கே வந்தார். *இயேசு வந்து என்ன கூறினார் தெரியுமா? லாசருவே வெளியே வா!* நீங்களே கூறுங்கள் வியாதியாய் இருப்பவனை குணமாக்குவது பெரிய காரியமா? அல்லது மரித்தவனை உயிரோடு எழுப்புவது பெரிய காரியமா? எது தேவனுடைய நாமத்திற்கு பெரிய மகிமையைக் கொண்டு வரும். மரித்தவனை உயிரோடு எழுப்புவதே தேவனுடைய நாமத்திற்கு பெரிதான மகிமையைக்கொண்டு வரும். **ஆகவே நீங்கள் கல்லறைக்கு செல்லும் வரைக்கும் பொறுமையாய் இருங்கள். மிகுதி எல்லாவற்றையும் தேவன் பார்த்துக் கொள்ளுவார்.** யார் மீதும் எரிச்சல் கொள்ள வேண்டாம். யார் மீதும் சீறிப்பாய வேண்டாம். ஐயோ இவர் நேரத்திற்கு

இவர் நேரத்திற்கு வந்திருந்தால் இது நடந்திருக்குமே என்று யோசிக்க வேண்டாம். தேவன் தன்னுடைய நேரத்தில் பெரிய காரியங்களைச் செய்வார். நாங்கள் மரிப்பது தான் தேவனுக்கு சித்தமானால் அது நடக்கட்டும் உங்களுக்கு வருகின்ற பிரச்சினைகள் கூடுதலாக வரட்டும்.

**ஆகவே ஆண்டவர் பிந்திக் காரியம் செய்தால் என்ன? சப்பாணிகளாக இருக்கின்ற உங்களை மலையிலே ஏறிவா என்று சொன்னால் என்ன? உங்கள் இருதயத்தைக் குத்தினால் என்ன? நீங்கள் கூறுங்கள், இயேசு தான் தேவன், அவர் எனக்குப் போதும், அவர் இருந்தால் எங்களுக்கு எல்லாம் இருக்கும்.** சில வேளைகளில் குறைவு இருந்தாலும் அதை அவர் ஏற்ற வேளையில் நிறைவாக்குவார். எனவே துன்பம் வருகின்ற பொழுது இன்னும் வா என்று சொல்லி சந்தோஷமாய் இருங்கள். உங்களுக்காய் தேவன் அற்புதம் செய்யும் வரைக்கும் பொறுமையாய் காத்திருங்கள். அது தான் அற்புதம். **ஆகவே முதலாவது ஆண்டவர் உங்களைக் காயப்படுத்தி, உங்களை நோகப்படுத்த விடுங்கள். ஆண்டவர் அற்புதம் செய்வார். ஆண்டவர் உங்களை விட்டு தூரம் போனபோல இருக்கலாம். ஆனால் நீங்கள் கடும் முயற்சி எடுத்து கஸ்டப்பட்டு நிந்தனை, அவமானம எல்லாவற்றையும் சகித்து அவர் இருக்கின்ற இடம் வரைக்கும் ஏறிப் போனால் அற்புதம் பெறலாம். பெரிய ஏமாற்றங்களின் பிற்பாடு ஆண்டவர் உங்களுக்கு அற்புதம் செய்வார்.**

அதுவரைக்கும் நீங்கள் பொறுமையாய் இருங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தேவன் உங்களுக்கு அற்புதம் செய்தபடியால் அவரை ஒரு நாளும் மறக்க வேண்டாம். அவர் தான் உங்களுடைய தேவன். கர்த்தர் உங்களை ஒரு போதும் கைவிடமாட்டார். ஆண்டவர் உங்களை நேசிக்கின்றார். நீங்கள் அவருக்காய் பரிசுத்தமாய் வாழுங்கள். தேவனுடைய நாமம் உங்கள் வாழ்வில் மகிமைப்படுவதாக. அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது.

முற்றும்

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் வேதநாயகம் மகாராஜா**



## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

### சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

### சந்தா கூப்பன்

பெயர் :-.......................................................

விலாசம் :-.......................................................

.......................................................

.......................................................

.......................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

To:........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................

..........................................................................